Australian Government

BE COVIDSAFE

# COVID-19 நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளல்

COVID-19-இற்கான நோயறிகுறிகள் எதுவும் உங்களுக்கிருந்தால், அவை மிதமானவையாகவே இருந்தாலும், கூடிய விரைவில் நீங்கள் நோயறிவுச் சோதனை ஒன்றை மேற்கொள்ளவேண்டும். முன்னதாகவே நோய்த்தொற்றைக் கண்டறிவதென்பது உங்களுடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், உங்களுடைய சமூகத்தினருக்கும் இந்த வைரஸ் பரவுவதை உங்களால் தடுக்க இயலும் என்பதைக் குறிக்கும்.

## நோயறிவுச் சோதனைகளின் வகைகள்

உங்களுக்குக் COVID-19 வைரஸ் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கு 2 வகையான சோதனைகள் உள்ளன:

- 'போலிமெரேஸ் ச்செய்ன் ரியாக்ஷன்' (polymerase chain reaction (PCR))
- 'ரேபிட் ஆண்ட்டிஜென் செல்ஃப்-டெஸ்ட்ஸ்' (rapid antigen self-tests (RATs)) எனப்படும் 'துரித சுய-நோயறிவுச் சோதனைகள்'.

## சோதனையை எப்போது மேற்கொள்ள வேண்டும்

பின் வரும் தருணங்களில், நேரடியாகச் செல்லக்கூடிய, அல்லது வாகன-நுழைவு வழிகள் உள்ள COVID-19 நோயறிவுச் சோதனை சிகிச்சையகம் ஒன்றிற்கு நீங்கள் செல்லவேண்டும்:

- COVID-19 நோயறிகுறிகள் உங்களுக்கு இருந்தால்
- நோய்த்தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட யாராவதொருவருடன் நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர் என்றால்
- நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளுமாறு சுகாதாரத் தொழிலர் ஒருவரால் உங்களுக்கு சொல்லப்பட்டிருந்தால்.

உங்களுக்கு COVID-19 அறிகுறிகள் இருந்தால், COVID-19 நோயறிவுச் சோதனை சிகிச்சையகம் ஒன்றில் நீங்கள் எத்தனை சோதனைகளை (துரித சுய-சோதனைகள் அல்லது PCR சோதனைகள்) வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம். உங்களுடைய சோதனை முடிவுகளை நீங்கள் பெறும் வரை வீட்டில் உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள்.

பின் வரும் தருணங்களில் COVID-19 நோயறிவுச் சோதனை ஒன்றை மேற்கொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு இல்லை:

- உங்களுக்கு அறிகுறிகள் இல்லை என்றால்
- பொது மருத்துவமனை ஒன்றில் நீங்கள் சிகிச்சை நாடிக்கொண்டிருந்தால்
- ACT, NSW, SA அல்லது VIC ஆகிய இடங்களுக்கு நீங்கள் பயணம் செய்துகொண்டிருந்தால்.

இலவச PCR சோதனை ஒன்றை மேற்கொள்ள நீங்கள் ஒரு ஆஸ்திரேலியப் பிரசையாகவோ, நிரந்தர வசிப்பாளராகவோ இருக்க வேண்டிய தேவையில்லை. உங்களுக்கு அண்மையிலுள்ள நோயறிவுச் சோதனை சிகிச்சையகம் ஒன்றைக் கண்டறிய உங்களுடைய மாநிலத்தின் அல்லது எல்லைப்பிரதேசத்தின் சுகாதார வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுடைய சோதனையை மேற்கொண்டதும், உங்களுடைய முடிவை நீங்கள் பெறும் வரை நீங்கள் வீட்டில் உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## துரித நோயறிவுச்-சோதனைகள் (rapid antigen tests (RATs))-ஐப் பெறல்

இத் திட்டத்தில் பங்குபற்றும் மருந்துக்கடைகள், சூப்பர்மார்க்கெட்டுகள் மற்றும் இதர சில்லரை வியாபரக் கடைகளிலிருந்து துரித நோயறிவுச்-சோதனிகள் (rapid antigen tests)-ஐ நீங்கள் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

24 ஜனவரி முதல் தகுதி பெறும் 'காமன்வெல்த்' தள்ளுபடி அட்டை வைத்திருப்பவர்கள், 3 மாத காலத்தில் 10 இலவச RAT- துரித நோயறிவுச் சோதனிகளை (ஒரு மாதத்தில் அதிகபட்சமாக 5) இந்தத் திட்டத்தில் பங்குபற்றும் மருந்துக்கடைகளில் இருந்து பெறலாம்.

இதற்கான தகுதியை அளிக்கும் தள்ளுபடி அட்டைகளில் உள்ளடங்குவன:

- Commonwealth Seniors Health Card
- Department of Veteran's Affairs Gold, White அல்லது Orange Card
- Health Care Card
- Low Income Health Card
- Pensioner Concession Card.

இந்தத் திட்டத்தில் பங்குபற்றும் மருந்துக்கடை ஒன்றிற்கு நீங்கள் நேரடியாகச் சென்று உங்களுடைய தள்ளுபடி அட்டையைக் காண்பிக்கவேண்டியிருக்கும்.

உங்களுடைய தள்ளுபடி அட்டையில் உள்ள விபரங்களைப் பதிவுசெய்வதற்கான சம்மதத்தினை நீங்கள் மருந்துக்கடைக்குக்

கொடுக்கவேண்டியிருக்கும். ஏற்கனவே RAT துரித நோயறிவுச் சோதனிகள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பது உள்ளடங்க, மருதுக்கடையானது உங்களுடைய விபரங்களைச் சோதித்து உறுதிப்படுத்தும்.

தகுதிபெறும் ஒவ்வொரு நபருக்குமென குறைந்தபட்சமாக 2 RAT துரித நோயறிவுச் சோதனிகளை மருந்துக்கடை உங்களுக்குக் கொடுக்கும். கிடைப்பைப் பொறுத்து, தகுதி பெறும் ஒவ்வொரு நபருக்கும் கிடைக்கும் ஒரு மாதத்திற்கான அனைத்து RAT துரித நோயறிவுச் சோதனிகளும் ஒரே நேரத்தில் வேண்டுமென நீங்கள் கேட்கலாம்.

மருந்துக்கடைகள், சூப்பர்மார்க்கெட்டுகள் மற்றும் இதர சில்லறை வியாபாரக் கடைகளிலிருந்து RAT துரித நோயறிவுச் சோதனிகள் இன்னும் அதிகமாகக் கிடைத்துக்கொண்டிருக்கும். புதிய சரக்கு விநியோகம் வந்து சேர்ந்துவிட்டதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள மருந்துக்கடைக்குச் செல்வதற்கு முன்பாக உங்களுடைய மருந்துக்கடையினரை நீங்கள் தொலைபேசி மூலம் அழைக்கவேண்டும்.

## COVID-19 தொற்று இல்லை என்ற முடிவைப் பெறல்

உங்களுக்கு நோய்த்தொற்று இல்லை என்று உங்களுடைய 'துரித நோயறிவுச் சோதனை' (rapid antigen) அல்லது PCR முடிவு கூறினால் நீங்கள் தொடர்ந்து தனிமைப்பாட்டில் இருக்க வேண்டியதில்லை.

## COVID-19 தொற்று இருக்கிறது என்ற முடிவைப் பெறல்

உங்களுக்கு COVID-19 தொற்று இருக்கிறது என்று உங்களுடைய 'துரித நோயறிவுச் சோதனை' (rapid antigen) அல்லது PCR சோதனை முடிவு கூறினால் நீங்கள் உடனடியாக உங்களை வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

PCR சோதனை ஒன்றை நீங்கள் மேற்கொண்டால், உங்களுடைய உள்ளூர்ப்-பகுதி சுகாதாரத் துறை உங்களுடன் தொடர்புகொள்ளும்.

'துரித நோயறிவுச் சோதனை' (rapid antigen test) ஒன்றை நீங்கள் மேற்கொண்டால், சுகாதார அதிகாரிகளுக்கு நீங்கள் அதைத் தெரிவிக்கவேண்டும். COVID-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒருவராக உங்களைப் பதிவு செய்துகொள்ள, உங்களுடைய உள்ளூர்ப்-பகுதி சுகாதாரத் துறையினரை, அல்லது **1800 020 080**-இல் National Coronavirus Helpline -ஐ அழையுங்கள். மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு **131 450**-ஐ அழையுங்கள்.